**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திருமதி.வெ.மோனிகா, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2026 ம் ஆண்டு ஜுலை மாதம் 20 ம் நாள் திங்கட்கிழமை

**இ.ம.எண்.2/2026 அதன் அ.வ.எண்.352/2025**

அகஸ்தீஸ்வரன் ... மனுதாரர் / 2 ம் பிரதிவாதி

/எதிர்/

1. பெருமாள்
2. ஆ.கார்த்திக் குமார் ...எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இந்த மனுவானது 17.06.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.B.கமலநாதன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும் எதிருரை தாக்கல் இல்லை என மேற்குறிப்பு செய்துள்ள நிலையில், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும் மனு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்ற ஆய்விலிருந்தும் இன்று இந்த நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**உத்தரவு**

இந்த மனுவானது, உரிமையியல் விசாரணை நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் பிரிவு 151– ன் படி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுதாரர் தரப்பில், அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள் / வாதிகளால் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் அசல்

வழக்கில் மனுதாரர் கடந்த 06.11.2025 ம் தேதி ஆஜராக வேண்டி வழக்கறிஞர் அலுவலகத்தில் கடந்த 04.11.2025 ம் தேதி எதிர்வழக்குரை அதிகாரத்தில் கையொப்பம் இட்டு கொடுத்திருந்ததாகவும், ஆனால் மேற்படி எதிர்வழக்குரை 06.11.2025 ம் தேதி வேறொரு வழக்கு கட்டுடன் சேர்ந்து விட்டதால் மேற்படி தேதியில் தாக்கல் செய்யவில்லை. அதனால் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும், மேற்படி தவறானது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல என்றும், எனவே, மனுதாரருக்கு எதிராக கடந்த 06.11.2025 ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து உத்தரவிட வேண்டியது அவசியம் என மனுதாரர் தரப்பில் கட்சி செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனு சங்கதிகளை மறுத்து ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காமல் எதிருரை தாக்கல் இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

3. மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டி கடந்த 06.11.2025 ம் தேதி ஒத்தி வைக்கப்பட்ட நிலையில், மனுதாரர் கடந்த 04.11.2025 ம் தேதி வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து கையெழுத்து செய்த எதிர்வழக்குரையானது, மனுதாரர் ஆஜராக வேண்டிய தேதியான 06.11.2025 ம் தேதி வேறொரு கட்டுடன் சேர்ந்து விட்டதால், எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றும், அதனால் மேற்படி தினத்தில் மனுதாரருக்கு எதிராக 06.11.2025 ம் தேதி ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. மேலும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரரின் மனு சங்கதிகளை மறுத்து ஆட்சேபிக்காத நிலையிலும், மனுதாரர் இம்மனுவுடன் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ள நிலையிலும், மனுதாரருக்கு அவரது தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகைக்கு ஒரு வாய்ப்பு அளிக்கும் வகையிலும், மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு, இம்மனுவை செலவு

தொகையுடன் அனுமதித்து உத்தரவிடுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக அமையும் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக, இம்மனுவின் செலவு தொகையாக ரூ.1000/—ஐ மனுதாரர், எதிர்மனுதாரர்களுக்கு 27.07.2026 க்குள் செலுத்தும்பட்சத்தில் இந்த மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனு தானாக தள்ளுபடி ஆகிவிடும் எனவும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க 27.07.2026.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் எழுதப்பட்டு, விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஜுலை திங்கள் 20ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VENKATACHALAM MONIKA

Orders uploaded on 20.07.2026
Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.07.20 19:31:44 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

இரு தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் : இல்லை

VENKATACHALAM MONIKA

Orders uploaded on 20.07.2026
Digitally signed by VENKATACHALAM MONIKA
Date: 2026.07.20 19:31:55 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

முு.மா.உ.நீ, திருநெல்வேலி.
இ.ம.எண்.2/2026
இன்
அ.வ.எண்.352/2025
வரைவு/நேரிய உத்தரவு
நாள் – 20.07.2026.